
# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

ஆனி மாத வெளியீடு (June-July 2013)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

## கடவுளை வழிபடுவோர் கழகம் (க.வ.க.) விளக்க அறிக்கை

காணிக்கை ரூ.4/-

# உள்ளுறை

1980இல் குருதேவர் அவர்கள் கடவுளை வழிபடுவோர் கழகத்தை காரியேந்தல்பட்டியில் உள்ள சித்தர் மாநகர் குருகுலத்தில் அறிவித்து வெளியிட்ட கழக அறிக்கையே இந்த இதழில் வெளியிடப் படுகின்றது. சமுதாயச் சூழல்களாலும், அரசியல் நிலைமைகளாலும் இந்த கடவுளை வழிபடுவோர் கழகம் என்ற பகுத்தறிவுப் போக்கு நிறைந்த ஆராய்ச்சிக் கழகம் தமிழகத்தில் தனித்தன்மையோடு வளர்க்கப் பட முடியாமலேயே போய்விட்டது. இருப்பினும் இந்த கடவுளை வழிபடுவோர் கழகம் என்பது ஓர் ஒப்பற்ற அமைப்பாகும். இனி வரும் காலக்கட்டங்களில் யாரேனும் குருதேவரின் வழிகாட்டுதலுடன் 'கடவுளை வழிபடுவோர் கழக'த்தை அமைத்து வளர்த்திட முனைந்தால் அதற்கு இந்த விளக்க அறிக்கையும் இதனுடன் வழங்கப்பட்டிருக்கும் கருவறைச் சாத்திரமும், ஞானத்தெளிவும் அடிப்படையாக அமைந்திடும் என்ற நோக்கத்துடன் இந்த மாத சுற்றறிக்கையில் வெளியிடப் படுகின்றது.

1. **கடவுளை வழிபடுவோர் கழகம் - அறிக்கை**
2. **கருவறைச் சாத்திரம்**
3. **முடிவுரை (ஞானத்தெளிவு)**

# கடவுளை வழிபடுவோர் கழகம்

**வெளியிடுபவர்:**

**கடவுளை வழிபடுவோர் கழகம்**

**சித்தர்நெறி இலக்கியப் பதிப்பகம்**

ஒவ்வொருவரும் தன்னையறிய, தனது உற்றூர் உறவினர் ஊரார்... முதலியோருடன் உண்மையான அன்பு பூண்டு ஒழுகிட; மனிதத் தன்மையுடன் பிறரோடு கூடிவாழ; பொறுப்புடனும் பொறுமையுடனும் செயல்பட்டிட; பிறரை மதிக்க, பிறருக்கு உதவ; முறையோடு அழகைச் சுவைக்க; அளவோடு உரிமையை நிலைநாட்ட; எங்கும் அமைதியைக் காக்க; சமத்துவத்திலும், சகோதரத் தத்துவத்திலும் செயலளவில் ஈடுபாடு காட்ட; ... கற்றுக் கொடுப்பதுதான் சித்தர் நெறி => தமிழர் மதம் => திராவிடர் மதம் => இந்துமதம். எனவே மதம்தான் மனிதனை மனிதனுக்குவது. இதுதான் மனித சமுதாய நடைமுறைகளில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், சமத்துவத்தையும், நீதியையும், நேர்மையையும் செழித்தோங்கச் செய்கிறது. மதம் இல்லாது மனித வாழ்வே புனிதம் அடைய முடியாது; இனிமை யடைய முடியாது.

கடவுளை வழிபடுவோர் கழகம் இந்தியத் துணைக் கண்டத்தின் [1]பூர்வீகக் குடிகளான தமிழர்களின் பண்பாடு, தெய்வீகம், மருந்து, வரலாறு, இலக்கியம், ... முதலியவைகளை ஆராய்ந்து நூல்கள் வெளியிடவே அமைக்கப் படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் இக்கழகத்தில் உறுப்பினராகித் தொண்டு செய்ய அழைக்கப் படுகிறார்கள்

இக்கழகத்தின் முழுமையான இயக்கம் [2]ஐம்பெருங்குழு (5), எண்பேராயம் (8), பேரவை (48) ஆகிய மூன்று அமைப்புக்களால் நிர்வகிக்கப்படும். [3]ஆய்வுகள் அனைத்தும் பகுத்தறிவு நோக்கில், விஞ்ஞானச் சூழலில் நிகழ்த்தப்படும். ஆய்வின் முடிவுகள் மக்களுக்கு நூல்வடிவில்

வழங்கப்பட்டு எல்லோரும் நன்மை பெறப் பயன்படுத்தப் படும்.

மனித வாழ்வுக்குத் தேவையான [4]சமய அறிவு, [5]சமுதாய மரபுப் பிடிப்பு, [6]மருத்துவ அறிவு, [7]வரலாற்றறிவு, [8]இலக்கிய அறிவு, ... முதலியவற்றை முழுமையாக உலகுக்கு வழங்குவதுதான் கடவுளை வழிபடுவோர் கழகத்தின் நோக்கம்.

சித்தர்களின் தத்துவங்களையும், கொள்கைகளையும் உலகெங்கும் பரப்பவும்; புதிய [9]நோக்கையும், போக்கையும் உலகெங்கும் எல்லாத் துறையிலும் உருவாக்கவும்; [10]சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழு, [11]இந்துமத வளர்ச்சிப் பேரவை, [12]உலக மத ஆய்வுக்குழு, [13]சித்தர் நெறி ஆய்வுக்குழு, [14]தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு, [15]தெய்வீக ஆராய்ச்சிக் குழு, [16]பதினெண்சித்தர் ஆய்வுக் குழு, பண்பாடு, தெய்வீகம், மருந்து, வரலாறு, இலக்கியம், ... முதலிய பல ஆய்வுக் குழுக்களைக் கொண்ட ஒரு பதிவு பெற்ற அமைப்பை உருவாக்கி; அவற்றின் நோக்கம், கொள்கை, சட்டதிட்டங்கள், ... முதலிய இன்னோரன்ன பிற முதன்மைமிகு அடிப்படை விளக்கங்களை நூல்வடிவில் அச்சிட்டுப் பலரையும் இக்கழகத்தில் பங்கு பெறும்படி செய்ய வேண்டும்.

இக்கழகம் தன் கொள்கையைப் பரப்ப நூல்கள் வெளியிடல், சொற்பொழிவு வழங்கல் முதலிய பணிகளில் ஈடுபடும். தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, ... என்ற முக்கோணத்துள்ளேயே தனது எல்லாப் பணிகளையும் அமைத்துக் கொள்ளும். இம்மூன்றும் முறையான வரலாற்றைப் பெற; பகுத்தறிவு விளக்கங்களைப் பெற; உலக அளவில் உணரப்பட உழைப்பதே இக்கழகத்தின் நோக்கம்.

கடவுளை வழிபடுவோர் கழகம் - பகுத்தறிவு என்பது பழமையை மறுப்பது, வெறுப்பது, ஏளனம் செய்வது, எதிர்ப்பது, அழிக்க முற்படுவது ... என்ற ஒரு தவறான கருத்து மறுமலர்ச்சியின் பெயரால் மக்களிடையில் பரவி வளர்ந்து வருவதைத் தடுத்துத் திருத்த முயலும். பகுத்தறிவு என்பது, மனித வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ள [17]மூடநம்பிக்கைகளை, கண்மூடிப் பழக்க வழக்கங்களைத் திருத்துகின்ற ஒன்றேயாகும். எதையெடுத்தாலும் ஏன்? எப்படி? எதற்கு? எவ்வாறு?

எப்பொழுதிலிருந்து? என்றுவரை? தேவையா? பயனுடையதா? ... என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்துப் பார்க்கின்ற ஓர் அறிவியல் தன்மையேயாகும். இத்தன்மையே இல்லாத நிலையில் பகுத்தறிவின் பெயரைச் சொல்லிப் பரவும் அறிவியல் போக்கைத் தடுக்க இக்கழகம் முயலும்.

சமயத்தின் பெயரால் அறிவு வளர்ச்சி, சமுதாய ஒற்றுமை, தனிநபரின் பொருளாதாரப் பாதிப்பு, குறிப்பிட்ட சிலரின் சுரண்டல், குறிப்பிட்ட சிலரின் உரிமையிழப்பு, தேவையில்லாத செயல்கள், பயனற்ற பழக்க வழக்கங்கள், பகுத்தறிவுக்குப் பொருந்தாத புராணக் கதைகள், ... முதலிய இன்னோரன்ன பிற கேடுகள் மனித சமுதாயத்தில் வளராமல் தடுப்பது கடவுளை வழிபடுவோர் கழகத்தின் தலையாய நோக்கமும், குறிக்கோளும், கொள்கையுமாகும்.

பழமை வாதமும், கண்மூடிப் போக்கும், மூடநம்பிக்கையும், அநுபவிக்காதனவற்றைப் பற்றி அதிகம் பேசும் ஆன்மீகப் போக்கும்; எதையும் அறிய, அறிவிக்க முன்வராத சமயத் தலைமைகளும்; நமது மதத்தை இருள் நிறைந்ததாக ஆக்கிவிட்டன. அதனால், மதமறுப்பும், வெறுப்பும், எதிர்ப்பும், பழிப்பும், இழிப்பும், அழிப்பும், பகைப்பும், ... மிகுந்து வளர்ந்தோங்கி விட்டன. இந்நிலையில் பழம்பெரும் தத்துவங்களை வித்தாக்கி ஞானப்பயிர் விளைவித்து அனைத்துப் பசிகளையும் போக்கிடும் பணி துவக்கப் பட்டிருக்கிறது. நமது மதம்,

*‘ஓர் ஒப்புயர்வற்ற சமுதாய ஒப்பந்தம்’,*
*‘தனிநபர் வாழும் வாழ்க்கை நெறி’,*
*‘குடும்ப உறவுகளை முறைப்படுத்தும் சட்டம்’,*
*‘பண்பாட்டுக் கூறுகளை பாதுகாக்கும் திட்டம்’,*
*‘அரசியல் ஒழுங்கை உருவாக்கும் செயல் சித்தாந்தம்’,*
*‘மானுட வாழ்வின் முன்னும் பின்னும் உள்ள மறைவுகளை விளக்கிடும் விளக்க நெறி’,*
*‘மனித வாழ்வின் பயன்களையும் நோக்கங்களையும் முறையாக விளக்கும் அறிவியல்’,*

(2013 June 43,73,114 ஆனி மாத இதழ்

*'மனித உணர்வுகள் தழைத்து வளரப் பயன்படும் மழை',*
*'மானுடர் நேர்மையாக வாழத் துணைபுரியும் (உழைக்கும்) வழி',*

.... என்ற பேருண்மைகளை விளக்கிடக் குருகுலமும், கருவறைகளும் அமைக்கப் பட்டுள்ளன. எண்ணற்ற அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உரிய பயிற்சிகளைப் பெறுகின்றனர்கள்.

நமது சமயச் சாத்திறங்கள், தோத்திறங்கள்; கருவறைச் சாத்திறங்கள், தோத்திறங்கள்; பூசாவிதிகள், ஒழுங்குகள், மரபுகள்; ஆகமங்கள், மீமாம்சைகள்; சிற்ப சாத்திறங்கள், நூல்கள்; ஓவிய சாத்திறங்கள், நூல்கள்; குடமுழுக்குச் சாத்திறங்கள், நூல்கள்; கருவறை உயிர்ப்புகள்; எழுந்தருளி உயிர்ப்புகள்; கடவுட் கொள்கையை விளக்கும் சாத்திறங்கள், தோத்திறங்கள், நூல்கள், மாலைகள், கண்ணிகள், ... முதலியவற்றை எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் சிறுசிறு வெளியீடுகளாக அச்சிட்டு மலிவு விலையில் மக்களுக்கு வழங்கவும்; சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், கோயில் பணியாளர்களுக்கு மறுபயிற்சி வழங்கவும்; வாரவழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தவும் 'கடவுளை வழிபடுவோர் கழகம்' அமைக்கப் பட்டிருக்கின்றது.

எந்த ஓர் இனமும், மற்றோர் இனத்தை அடிமைப்படுத்திச் சுரண்டி வாழ்வதை மனிதப் பண்புக்குரியதாகக் கருத முடியாது. எந்த ஓர் இனமும் உழைக்காமல் ஏமாற்றியே சுக வாழ்வு வாழ்வதை மனிதப் பண்புக்குரியதாகக் கருத முடியாது. இதுபோல், எந்த மொழியும், மற்றொரு மொழியைத் தாழ்த்தி, ஆழ்த்தி, வீழ்த்தி உயர்வதை மனித நாகரிகத்துக்கு உரியதாகக் கருத முடியாது. ஒரு மொழியை உயர்த்த இன்னொரு மொழியைத் தாழ்த்துவதும்; ஒருமொழி செழிப்படைய இன்னொரு மொழியை அழிப்பதும் மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்டவை. இவை கண்டிப்புக்குரியவையே. இதேபோல், ஒரு சமயநெறி இன்னொரு சமய நெறியின் வீழ்ச்சியில்தான் வளர்ச்சி பெற வேண்டுமென்ற தத்துவம் மனிதத் தன்மைக்கே உரியதல்ல என்பதோடு இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றுமாகும். இனம், மொழி, சமயம் பற்றிய இக்கருத்துக்களே 'கடவுளை வழிபடுவோர் கழக'த்தின் அடிப்படைக் கருத்துக்கள்.

- ☐ மனித வாழ்வு எங்குத் துவங்கி எங்கு முடிவடைகிறது?
- ☐ இப்பிறப்புக்கு முன் உயிரின் நிலை என்ன? இறப்புக்குப் பின் உயிரின் நிலையென்ன?
- ☐ மனித வாழ்வில் ஏற்படும் விருப்பு, வெறுப்பு, வெற்றி தோல்வி, இன்பம் துன்பம், நட்பு பகை, ... முதலியவை எதிர்பாராது ஏற்படுபவையா? அல்லவா?;
- ☐ மனிதனுக்கு ஏற்படும் நோய்களுக்கும் முற்பிறவிகளுக்கும் தொடர்புண்டா?
- ☐ நோயற்ற வாழ்வு வாழ முடியுமா?
- ☐ மரணத்தைத் தவிர்க்க முடியுமா?
- ☐ உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்புகள் எப்படிப் பட்டவை?
- ☐ எல்லா வளங்களும் இருந்தும் அநுபவிக்க முடியாததும்; அநுபவிக்க முடிந்தும் வறுமை தடுப்பதும் ஏன்?
- ☐ கோவில், கடவுள் வழிபாடு, ... முதலியவை மனித வாழ்வுக்கு எந்த அளவு உதவுகின்றன?
- ☐ பேசுகின்ற மொழிக்கும், வாழுகிற நாட்டுக்கும், பிறந்த இனத்துக்கும், உயிருக்கும் என்ன உறவு?

... இவை போன்ற எல்லா வினாக்களுக்கும் விடை காண்பது ‘கடவுளை வழிபடுவோர் கழக'த்தின் அடிப்படைக் கொள்கையும் குறிக்கோளுமாகும்.

உலகம் இன்றுவரை [18]‘இந்துமதம்’ என்ற சொல்லை ‘இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் மதம்’ என்றுதான் அறியும். ஆனால், இந்தச் சொல் குறிக்கும் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? வரலாறு என்ன? இதைத் தோற்றுவித்தவர் யார்? ... என்பன போன்ற வினாக்களை இன்றுவரை உலகம் முழுமையாக எழுப்பிச் சிந்திக்கவே இல்லை.

இந்தியாவின் பூர்வக் குடிகளான தமிழர்களின் மதம் [19]சித்தர் நெறி. இன்றுள்ள இந்து மதத்தின் தொண்ணூற்றைன்பது பங்குத் தத்துவங்கள் சித்தர்களால் வழங்கப் பட்டவை. இந்தியத் துணைக் கண்டத்திலும், உலகின் பிற பகுதிகளிலும் மனிதன் தெய்வத்தை வழிபட வேண்டும் என்ற உணர்வையும், வழிபாட்டு முறைகளையும், வழிபடு இடங்களையும்

உருவாக்கிக் கொடுத்தவர்கள் சித்தர்களே. எனவே, இந்துமதத்தை உண்டாக்கியவர்கள் பதினெண்சித்தர்கள் ஆவர் என்பதோடு; உலகில் மனிதனுக்கு கடவுளை அறிமுகப் படுத்தியவர்களே இப் பதினெண்சித்தர்கள்தான் என்ற பேருண்மை விரைவில் உலகத்தால் உணரப்பட வேண்டும்.

அநுபவத்தில் இறைவனை உணர, காண, அருள் பெற்றிட ... உதவும் வழிமுறைகளையுடைய ஒரே மதம் சித்தர் நெறிதான். அதுவே, ஆரியக் கலப்பினைப் பெற்று உலகால் இந்துமதம் என்று அழைக்கப்படுகிறது. புத்தம், கிறித்தவம், முகம்மதியம், ... முதலிய மதங்கள் போன்று இந்துமதம் விரைவில் உலகெங்கும் பரவ வேண்டும். ஆரியர்கள், இந்துமதம் உலகெங்கும் பரவியிருந்ததைச் சிதைத்ததால்தான்; இன்றுவரை இந்துமதத்தில் செல்வாக்குள்ள உயர் குலத்தவராய் வாழ முடிகிறது. மீண்டும் உலகெங்கும் திருநீறும், குங்குமமும், திருமண்ணும், திருச்சந்தனமும், திருச்சாந்தும் அணியப்பட்டு இறைவனின் திருவருளைத் துய்த்துப் 'பேரின்ப வாழ்வு வாழும் நிலை' ஏற்பட வேண்டும்.

சித்தர்கள் கட்டிய 1) தேவாலயங்கள், 2) திருக்கோயில்கள், 3) இருக்கைகள், 4) பீடங்கள், 5) மடங்கள், 6) அமளிகைகள், 7)திருப்பதிகள், 8) பசுக்கோட்டங்கள், 9) பாசச்சாலைகள், ... முதலிய இன்னோரன்ன பிற வழிபாட்டு இடங்கள் உலகெங்கும் உள்ள பேருண்மையினைச் [20]சான்றுகளோடும், ஊன்றுகளோடும் ஆராய்ச்சிப் பூர்வமாக நிலைநாட்டினால்தான் உலகில் மனித இனத்தின் பொற்காலம் உருவாகும்.

இந்துமதம் பற்றி இந்தியத் துணைக் கண்டத்து மக்களும் வெளியுலகத்தினரும் அறிந்து வைத்திருப்பது [21]*'இது மாயங்கள் செய்யும் மந்திரவாதிகள் நிறைந்த ஒரு மதம். இம்மதம், ஒவ்வொரு காலக் கட்டத்திலும் குறிப்பிட்ட சிலரின் மந்திர மாயங்களால் புதுத் தெம்பு பெற்றிடும். எத்தனை மதங்கள் சென்றாலும் இந்து மதத்தினர் ஏற்றுக் கொள்வர். புது மதத்தோடு பழைய மதத்தையும் கலந்தே தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வர் ...'* என்பன போன்றவைதான். இதே நிலை இனியும் தொடரக் கூடாது என்ற எண்ணத்தின்

அடிப்படையில்தான் ‘கடவுளை வழிபடுவோர் கழகம்’ அமைக்கப்பட்டுள்ளது. பகுத்தறிவுக்குரிய முறையில் இந்தியத் துணைக் கண்டத்தின் பழம்பெரும் மதங்கள் அனைத்தும் ஆராயப்படல் வேண்டும்.

ஒரு சில சமயப் பெரியார்கள் தங்களுடைய தெய்வீக ஆற்றலால் பல மாயங்களை விளைவித்துக் காட்டி வருகிறார்கள். ஆனால், அவர்கள் அக்குறிப்பிட்ட ஆற்றலை எப்படிப் பெற்றார்கள் என்பதை வெளிபடுத்துவதே இல்லை. தங்களுடைய வாரிசாக யாரையும் உருவாக்குவதில்லை.

எந்தச் சமயப் பெரியாரும் தங்களுடைய தெய்வீக ஆற்றல்களால் நிலையாக மனித சமுதாயத்தின் சிக்கலைத் தீர்க்கவில்லை. [22]எல்லா மாயங்களும் தற்காலிகமானவையே. சமயப் பெரியார்களின் அறிவு சார்ந்த அருளுரைகளே சமயநெறிகளாகிச் சமுதாயச் சீரமைப்புக்கும் நல்வாழ்வுக்கும் உதவியுள்ளன. எனவே, இன்று வாழும் எல்லாச் சமயங்களும் பிறப்பதற்கு முன்பிருந்த சமுதாய அமைப்புப் பற்றி ஆராயும் போதுதான்; இவைகளுக்கெல்லாம் முன்பே நன்கு திட்டமிடப்பட்ட [23]தெளிவான அறிவியல் சமயம் ஒன்று, ஓர் அறிஞர் குழுவால் உருவாக்கப்பட்டது என்ற பேருண்மை புலப்படும். அந்த அறிஞர் குழுவே, ‘பதினெண்சித்தர்கள்’ குழுவாகும். இந்த அறிவியல் முயற்சியில், தனிமனிதர்களின் கற்பனையும், தன்னலமும், புகழ்வெறியும், சுரண்டல் விருப்பமும் பல மாசுகளை, குறைகளை, கறைகளை, முடக்கங்களை, தேக்கங்களை, பயனற்றவைகளை, தேவையற்றவைகளைப் புகுத்தி விட்டன. இவற்றை யெல்லாம் கண்டுபிடித்து அகற்றினால் தூய்மையான, உயர்ந்த, பயன்மிக்க, நன்மை தரக்கூடிய ‘சித்தர் நெறி’ எனும் தமிழர் மதம் கிடைக்கும். அது உலக மக்கள் அனைவரின் தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் எல்லாவகையான அமைதிகளையும், நிறைவுகளையும், இன்பங்களையும், ஒற்றுமைகளையும், நலங்களையும் வழங்கிடும். இந்நிலை உருவாக இன்றுள்ள உலகச் சமயங்கள் அனைத்தையும் ஆராயப் புகுகிறது இந்தக் ‘கடவுளை வழிபடுவோர் கழகம்’.

மதம் என்றால் மது, அபின், ... போன்ற ஒரு மயக்கப் பொருள் என்பதாகக் கருதும் சிலரின் கருத்தும் திருத்தம் பெற இந்தக் கடவுளை

வழிபடுவோர் கழகம் முயலும். அதனால், எல்லோரையும் பகுத்தறிவுக்குரிய விஞ்ஞானப் பூர்வமான ஆராய்ச்சிகளைச் செய்யப் போகும் இந்தக் கடவுளை வழிபடுவோர் கழகத்தில் இடம் பெற அழைக்கிறோம்.

மறந்த, மறைந்த, குறைந்த, திரிந்த, மாற்றுருவம் பெற்ற, ... நமது சமய நெறிகளை, சமய வரலாறுகளை, சமயத் தத்துவப் பேருண்மைகளை, சமயக் கலைகளை, சமய நூல்களை, ... ஒருவாறு மீண்டும் நிலைநாட்டும் பெரும் பொறுப்பினை எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவுள ஒப்புதல் பெற்ற கடவுளை வழிபடுவோர் கழகம் ஏற்றுள்ளது.

புறச் சமயங்களும், புற இனத்தவரும், புற மொழியினரும் எவ்வளவோ முயன்றும் கூட அழித்தொழிக்க முடியாத பெருநிலை பெற்றது நமது சமயம். இது, வரலாற்றுக் காலமென்பது வரலாற்று மேதைகள் எல்லையிடும் கால அளவுக்கு மிகமிக முற்பட்டது. உலகின் தோற்றத்துக்கும் முந்தியதே நமது சமயம். நமது சமயமே, உலகம் முழுதும் மலர்ந்துள்ள சமயங்களுக்கு அடிப்படை. நமது சமயமெனும் அருவிக் கரையில் பூத்த மலர்களே உலகச் சமயங்கள்.

நமது சமயம் ஒரு குறிப்பிட்ட தனிமனிதராலோ! கடவுளாலோ! ... ஏற்படுத்தப் பட்டதல்ல. நமது சமய நெறிகள் குறிப்பிட்ட ஒரு நூலுக்குள் அடங்குபவை அல்ல. நமது சமய வழிபாடுகள் குறிப்பிட்ட ஓரிடத்துக் கோயிலோடு எல்லை பெறுவது அல்ல. நமது சமயம், இம்மண்ணுலகோடு மட்டும் நிற்பதல்ல. இது மண்ணும், விண்ணும், விண்கடந்த அண்டப் பெருவெளிக்குள் அடங்குபவையல்ல. நமது சமயத் திருநாள்களும், திருவிழாக்களும் குறிப்பிட்ட அளவுக்குள் அடங்குபவையல்ல. நமது சமயம் வழிபடும் பொருட்கள் என்றுமே எண்ணி முடிக்கப்பட முடியாதவை. நமது சமயக் கடவுளர்களின் வடிவங்கள் மனித அறிவின் கூர்மைக்கும், கற்பனை வளத்துக்கும், கலையுணர்வுக்கும் எல்லைகளாக அமைந்தவை; இந்த எல்லைகளை என்றைக்கும் எந்தச் சமயமும் கடக்க முடியாது. இப்படி நமது சமயம் எல்லாமாய், எங்கும் நிறைந்ததாய், எல்லாம் வல்லதாய் உள்ளதால்தான்; இது மனித இனத்தின் முதல் சமயமாகவும், முழுமையான சமயமாகவும்;

அழித்தொழிக்க இயலாத அமுதச் சமயமாகவும் உள்ளது.

இப்பேருண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாத அவசரக்காரர்கள், சிந்தைத் திறமில்லாதவர்கள், குறுகிய நெஞ்சமுடையவர்கள், குழப்பவாதிகள், கோணல் நோக்குடையவர்கள், ஆழமான கல்வியறிவு இல்லாதவர்கள், முறையான ஆராய்ச்சி அநுபவம் இல்லாதவர்கள், ... தங்கள் போக்கில்; நமது சமயத்தின் அருமை பெருமைகளைப் பழித்தும் இழித்தும் பேசிட ஆரம்பித்திட்டார்கள்.

*"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு*
*முன் தோன்றி மூத்த குடி தமிழ்க்குடி"* - ***ஐயனாரிதனார்.***

என்ற சொற்றொடர்கள் விளக்குகின்ற நுண்ணிய வரலாற்றுப் பேருண்மையினை உணர வல்லார் அதிகமாகத் தோன்றவில்லை; தோன்றிய சிலரிலும், அதனை உலகுக்கு உணர்த்தும் ஆர்வமுள்ளோர் இல்லாமற் போயினர். அதனால்தான், இந்த உலகம் உருவான வரலாறும், இந்த உலகில் உயிரினங்கள் உற்பத்தியான வரலாறும், இந்த உலகில் மனித இனம் தோன்றிய வரலாறும்; இந்த உலகில் தோன்றிய மனிதர்கள் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்திடாமல்; மனிதர்களாக உயர்வடையச் செய்வதற்குரிய 'மொழி', 'சமுதாயம்', 'சமயம்', 'அரசியல்' ... முதலியவை பிறந்த வரலாறுகளும்; உலகினரால் உணர முடியாத நிலை தொடர்கின்றது. அதனால், உலக வரலாறு முழுமையற்ற ஒன்றாகவும், பழுதுடைய ஒன்றாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இந்த மண்ணுலகில் முதன்முதல் மனித இனம் தோன்றிய இடம், மனித இனம் முதன்முதல் பேசிய மொழி, மனித இனம் முதன்முதல் ஏற்றிட்ட சமயம், மனித இனம் பெற்றிட்ட முதல் சமுதாய அமைப்பு, மனித இனம் முதன்முதல் பெற்றிட்ட அரசியல் அமைப்பு ... முதலிய இன்னோரன்ன பேருண்மைகள் எவ்விதக் கலக்கமும், மயக்கமும், குழப்பமும் இன்றி உலகினரால் உணரப்பட்டால்தான், 'உலக வரலாற்றுத் துறை', 'உலக சமயத் துறை', 'உலகச் சமுதாய இயல்', 'உலக அரசியல்' ... முதலியவை முழுமையடையும். அவற்றின் உரிய பயனை விளைவிக்கும். இதற்குரிய முயற்சிகளைத் தமிழர்களால்தான் செய்ய முடியும். அதுவும்,

ஆழமான கல்வியும், பரந்த அநுபவமும், உண்மை நாடும் ஆர்வமும், நடுநிலைப் பண்பும், பொறுமையும், சமயப் பற்றும், தளராத முயற்சியும், பகுத்தறிவு நோக்கும், விஞ்ஞான அறிவும், மரபு மாறுக் கோட்பாடும் உடைய தமிழர்களால்தான் - அதுவும், நமது கடவுளை வழிபடுவோர் கழகத்தாரால்தான் இப்பெரிய செயல்களைச் செய்திட முடியும்.

உலகில் தோன்றிட்ட மனித இனங்கள் இயற்கையாகப் பெற்றிட்ட அல்லது உருவாக்கிக் கொண்ட மொழி, பண்பாடு, நாகரிகம், ... முதலியவை அனைத்தும் போட்டி பொறுமைகளால், சண்டை சச்சரவுகளால், ஆதிக்கப் போர்களால் நலிவுறவோ! நசுக்கப்படவோ கூடாது. எல்லாமே இறைவனுல் வழங்கப்பட்ட அன்பளிப்புகள் என்றுணர்ந்து, அனைத்தையும் செழித்து வாழச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான், மனித இனத்தின் அரசியல் அமைப்பு, சமுதாய அமைப்பு, தனிமனித வாழ்வியல் அமைப்பு முதலியவை யெல்லாம் முழுமை பெற்று நல்ல பயனை நல்கி எங்கும் அமைதியையும், மகிழ்வையும் விளைவித்து எல்லாத் தனிமனிதரும் நிம்மதி, நிறைவு, அமைதியான இன்பம் ... முதலியவைகளைப் பெற்றிட முடியும்.

சித்தர்கள் உயரிய உலகச் சமுதாய ஒற்றுமை, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம், மகிழ்ச்சி, நிறைவு, அன்பு, தோழமை, ... முதலிய கருத்துக்களை வலியுறுத்தித்தான் தங்களின் சமயத் தத்துவங்களையும், சமய ஒழுகலாறுகளையும் உருவாக்கினர். சித்தர்கள், இப்பரந்த உலகில் பல்வேறு தட்ப வெப்ப நிலைகளும், அவற்றிற்கேற்ற இயற்கைச் சூழல்களும், மனித இன அமைப்புக்களும் வேறுபாடுடையவையாக இருக்கும் என்பதை உணர்ந்தே! பல சமயங்கள் பிறப்பதற்குரிய எல்லா வழிவகைகளையும் செய்திட்டனர்.

சித்தர்கள் உலகம் முழுதும் உயிர் அணுக்கள் மண்ணுக்குள்ளிருந்து வெளிப்படும் சிறந்த ‘உயிரணு ஊற்றுக்கள்’ உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து, அங்கங்கே கருவறை அமைத்து மனிதன் வழிபாடு செய்யும் இடங்களை அமைத்தனர். அந்த வழிபாட்டு இடங்களே பல சமயங்களுக்குரிய மூலக் கோயில்களாயின. சித்தர்கள் கன்பியூசியசு, சொராசிட்டர், மகாவீரர், புத்தர், இயேசு, முகம்மது நபி ... முதலிய

அருட்செல்வர்களை யெல்லாம் ஆதரித்து; இவர்களும் இவர்களன்றி வெளியுலகு அறியா வண்ணம் இலைமறை காய் போல் வாழ்ந்து சென்றவர்களும் எல்லாம் வல்ல இறையருளும், திருவருளும், குருவருளும், கருவில் திருவும், ஊழ்வினைப் பயனும், நல்விதித் துணையும் பெற்றே வாழ்ந்தவர்கள் என்று தெளிவாகக் கூறுகிறார்கள். இதன்மூலம், சித்தர்கள் இம்மண்ணுலகில் எங்கு வேண்டுமானாலும் திருவருட் செல்வர்கள் தோன்றி அருள்மழை பொழிந்து ஞானப்பயிர் விளைவிப்பர் என்ற பேருண்மையினை விளக்குகிறார்கள். அதனால், அருட்செல்வர்களின் பெயரால் தோன்றியுள்ள மதங்களுக்கிடையில் போட்டி, பொறாமை, பகை இல்லாமல் ஒற்றுமை நிறை உறவே உருவாக வேண்டும் என்ற சித்தர்நெறி புலப்படுகிறது. உலகின் பல பகுதிகளில் தோன்றும் அருட்செல்வர்கள் எல்லோருமே மனித இனத்தைப் புனிதப்படுத்தத் தோன்றுபவர்களே என்ற பேருண்மையை மிகத் தெளிவாக விளக்கிச் செயல்பட்டவர்கள் சித்தர்களே. ஆனால், சித்தர்களின் நூல்களும், செயல்திட்டங்களும் காலப் போக்கால் உலகம் மறக்க நேரிட்டு விட்டது.

சித்தர்கள், இம்மண்ணுலகில் விளைவிக்க நினைத்த ஞானப்பயிர்களின் நாற்றங்காலே தமிழர்கள். இந்த நாற்றங்காலுக்குத் தேவையான அருள்நீர் கிடைப்பதற்காக அவர்கள் வெட்டிய நன்னீர்க் கேணிகளை,

‘ஆயகலைகள் அறுபத்து நான்கு’,

‘மண்டலப்படிகள் நாற்பத்தெட்டு’,

‘உயிர்நிலை ஓச்சுக்கள் முப்பத்தாறு’,

‘உறுப்பு நலன்கள் முப்பத்திரண்டு’,

‘பைசாசக் கலைகள் பதினெட்டு’,

‘தெய்வீகக் கலைகள் ஒன்பது’,

‘கணக்கற்ற மந்திறங்கள்’, ‘மந்தரங்கள்’, ‘எந்திறங்கள்’ (இயந்திறங்கள்), ‘தந்திறங்கள்’,

... என்றிப்படிப் படைத்ததைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

தமிழர்களுக்குக் குருவழிக் கல்வி கற்கும் முறையில் பிடிப்பு நீங்கியதால்; சித்தர்களின் திட்டங்கள் பயனற்றுப் போயின. மீண்டும்,

சித்தர் நெறி செழிப்படைந்தால்தான் தமிழர்களும், அவர்களால் உலகமும் நன்னெறிப் படும். இதற்குச் சித்தர்கள் அமைத்த 'அமளிகை', 'மடம்', 'இருக்கை', 'திருவடி', 'சன்னிதானம்' என்ற 'பஞ்சாங்க அமைப்பு' [பஞ்ச + அங்க + அமைப்பு] அல்லது 'ஐந்திற அமைப்பு' மீண்டும் பீடத்தின் கீழ் இத்திருநாட்டில் முறைப்பட அமைய வேண்டும். இவற்றில், ஏற்கனவே உள்ளவற்றையும் செப்பனிட வேண்டும்.

சித்தர்கள் வழங்கிய ***மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், தந்தரம், தாந்தரம், தாந்தரீகம், தவம், வேள்வி, சித்தம் என்ற ஒன்பது தெய்வீகக் கலைகளி***லும் தேர்ந்தவர்களே உருவாக்க வேண்டும். ***பேய், பிசாசு, பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, … முதலிய பதினெட்டுப் பைசாசக் கலைகளி***லும் வல்லவர்கள் உருவாகிச் சமுதாயக் கேடுகளை அழித்தல் வேண்டும்.

***பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், புத்தர், புத்தியார், முத்தர், முத்தியார், சீவன்முத்தர், சீவன்முத்தியார், அருவச் சித்தியார், உருவச் சித்தியார், அருவுருவச் சித்தியார் என்ற (13) பதின்மூன்று வகையான திருவருட் செல்வர்களு***ம் தோன்றும்படிச் செய்து; அவர்கள் மூலம் உலக மக்கள் மொழி, நாடு, மதம், பண்பாடு, நாகரிகம், ஆதிக்கம், … என்ற வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையுடனும்; சகோதரத் தத்துவத்துடனும், சமத்துவத்துடனும் கூடி வாழ்ந்து அமைதியையும், மகிழ்வையும் துய்க்கும்படிச் செய்ய வேண்டும்.

அதாவது, சித்தர் நெறி உலகந் தழுவிய "சமத்துவச் சகோதரத் தத்துவச் சமுதாயம்" அமைக்கப்படல் வேண்டும் என்ற கருத்தையே அடிப்படையாகவும், உள்ளீடாகவும், முடிவாகவும் கொண்டது. இதற்காகச் சிந்தையும் நெஞ்சும் இணைந்து செயல்படல் வேண்டும் என்ற கருத்து சித்தர்களின் நூல்களில் வலியுறுத்தப் படுகின்றன. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர்; "… சித்தர் நெறி ***அறிவுப் பூர்வமாக*** மட்டும் செயல்பட்டு மனித வாழ்வில் நிறைவு, நிம்மதி, மகிழ்ச்சி, … முதலியவற்றை உருவாக்க முடியாது என்பதைப் புரிந்து எதையும் ***உணர்வுப் பூர்வமாகவே*** செயலாக்குகிறது.

இதன்மூலம்தான், மனிதச் சிந்தைக்கும், நெஞ்சத்துக்கும் போராட்டமோ போரோ நிகழ்வது தடுக்கப்பட முடியும்…” என்று தமது நூல்களில் பல இடங்களில் குறிப்பது இந்த இடத்தில் சுட்டிக் காட்டப் படுகிறது.

ஆலயங்கள், கோயில்கள், திருவிடங்கள், மடங்கள், பீடங்கள், இருக்கைகள், அமளிகைகள், திருவடிகள், புற்றுக்கள், குன்றுகள், நீர்த்துறைகள், … முதலியவற்றில் முறையான வழிபாடுகள் நிகழ்த்திடல் வேண்டும். எல்லா வழிபாட்டு இடங்களிலும் தூய்மையும், வாய்மையும் ஆட்சிபுரிதல் வேண்டும். எல்லாக் கோபுரங்களிலும் பொற்கலயங்கள் மின்ன வேண்டும். எல்லா வழிபாட்டு நந்தவனங்களிலும் நறுமணமிக்க மலர்கள் மலர வேண்டும். எல்லா வழிபாட்டு இடங்களிலும் தாமரைத் தடாகங்கள், பளிங்கு நீர் பெற்று இலங்க வேண்டும். எல்லா வழிபாட்டு இடங்களிலும் ஆறுகாலம் முரசு முழக்கமும், மணியடித்தலும் நடக்க வேண்டும். எல்லா வழிபாட்டு இடங்களிலும் சித்தர்கள் வழங்கிய ***‘நான்மறைகள்’, ‘நான்முறைகள்’, ‘நாநெறிகள்’, ‘நான்வேதங்கள்’, ‘நான் ஆகமங்கள்’*** முழுமையாகச் செயல் வடிவம் பெற வேண்டும்.

எல்லா ஆலயங்களிலும் ஆறுகாலம் [24]தொழுகை நடக்க வேண்டும்; எல்லாக் கோயில்களிலும் [25]ஆறுகாலப் பூசை நடக்க வேண்டும். எல்லாப் பீடங்களிலும், அமளிகைகளிலும், இருக்கைகளிலும், திருவடிகளிலும், சன்னிதானங்களிலும் பலிகள், பள்ளயங்கள், தளிகைகள், படையல்கள், ஓச்சுகள்… முதலியவை பல்லியங்களோடு நடக்க வேண்டும்.

சித்தர்கள் சாதாரண மக்களைச் சமயநெறிகளின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யவே திருவிழாக்களும், திருநாள் சடங்குகளும், விரதங்களும், உருவ வழிபாடுகளும் ஏற்படுத்தினர்கள். அதனால், அவையே சித்தர்கள் கண்ட சமயமெனப் பிறநாட்டார் தவறாகக் கருதிட்டனர். சித்தர் நெறியே => சிவநெறி => இதுவே சைவநெறி => இது உலகமெங்கும் பல நெறிகளாகியது.

இன்றைய இந்துமதத்தின் பழம்பெரும் கோயில்கள், ஆலயங்கள், பீடங்கள், மடங்கள், இருக்கைகள், அமளிகைகள், திருவடிகள், வழிபாட்டுக்குரிய திருவிடங்கள், மலைகள், நீர்த்துறைகள், புற்றுக்கள், …

முதலிய இன்னோரன்ன பிற அனைத்துமே சித்தர்களால் உருவாக்கப் பட்டவைதான். ஆரியர்களின் வேதநெறிக் கடவுள்களும், புராணங்களும் எவ்வளவுதான் முயன்று சித்தர்நெறிக் கடவுள்களோடும், வரலாறுகளோடும் கலக்க முயற்சித்தாலும், இன்றைக்குக் கூட அவற்றை இனம் கண்டு பிரித்திடலாம். அதாவது, அந்த அளவு ஆரியநெறிகள் அறிவுக்குப் புறம்பானவை. சித்தர்கள் பகுத்தறிவுக்குரிய மெய்ஞ்ஞான நெறியையே சமயமாக உருவாக்கினார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தின் பூர்வீகக் குடிகளான தமிழர்களின் சமுதாய ஒப்பந்தங்கள், அரசியல் சட்ட திட்டங்கள், தனிநபரின் கட்டுப்பாடுகள், மனிதாபிமான மரபுகள், மக்களின் வாழ்வியல் உரிமைகள், ... முதலிய அனைத்துமே சித்தர்களால் உருவாக்கப்பட்டவை. அதனால்தான் ஆரியநெறி கலப்புற்ற சித்தர் நெறி 'இந்துமதம்' என்ற பெயரைப் பெற்றவுடன் பகுத்தறிவு வாதிகளின் வினாக்களுக்கு விடைகூற முடியாத மூடநம்பிக்கைச் சமயமாகத் தோற்றம் அளித்தது.

**இன்றைக்கும் ஆரிய மாயைகள், புராணப் புளுகுகள், பொருளற்ற சாத்திரச் சம்பிறதாயங்கள், சடங்குகள், வடமொழியின் ஆதிக்கம், வேதாகமப் பொய்மைகள், ... முதலியவை யெல்லாம் இந்து மதத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டால்; இந்துமதம் உலகப் பொதுமதமாக, உலக மதங்களை இணைக்கும் சத்தியாக, மதமாச்சரியங்களையும், வேறுபாடுகளையும், போராட்டங்களையும், பகைமைகளையும், பொறாமைகளையும், ஆதிக்கப் போர்களையும் முழுமையாக அகற்றிடும் வலிய சத்தியாக ஆகிடும்**. அதற்குரியன செய்ய வேண்டும்.

இம்மண்ணுலகு நெருப்புக் கோளமாக இருந்து, பிறகு பனிக் கோளமாகிப் பிறகு நீர்க்கோளமாகி, பிறகே கல்லும் மண்ணும் தோன்றப் பெற்றது. கல்லும் மண்ணும் தோன்றிய பிறகே தாவரங்களும், பிற உயிர்களும் தோன்றின. கல் தோன்றி மண் தோன்று முன்னரே வானவெளியில் உள்ள பிற உலகங்களிலிருந்து பதினெண்சித்தர்கள் இவ்வுலகுக்கு வந்தார்கள். அவர்கள் தோற்றுவித்தவர்களே 'நவகோடி சித்தர்கள்', 'நவநாத சித்தர்கள்', 'வேத சித்தர்கள்', 'வேள்விச் சித்தர்கள்',

'ஞானசித்தர்கள்', 'தவசித்தர்கள்', 'நாயன்மார்கள்', 'ஆழ்வார்கள்', ... முதலியோர். இவ்வளவு பேர் தொடர்ந்து வாழையடி வாழையெனத் தோன்றிச் செயல்பட்டும் திருத்தம் பெருத மக்களைத் திருத்தும் பணியைத்தான் கடவுளை வழிபடுவோர் கழகம் ஏற்றுள்ளது.

கடவுளை வழிபடுவோர் கழகத்தில் உள்ள சித்தரடியான்கள்; பலரின் பலவகைப்பட்ட தாகங்களையும் போக்கி விடுவார்கள். மனக்கோளாறு, மணக்கோளாறு, உடல்நலிவு, செல்வநலிவு, தொழிலில் முடக்கம், அருவத் தாக்குதல், தொல்லைகள், நாகத் தாக்குதல் (தோசம்), செவ்வாய்த் தாக்குதல் (தோசம்),... என்றிப்படி எளிதில் நலமாகாத பல தொல்லைகளால் அவதிப்படும் அப்பாவி ஏழை மக்களுக்குத் தொண்டு புரிந்து நன்மை விளைவிக்க எல்லாக் கலைகளையும் கற்றும், பிறருக்குக் கற்றுக் கொடுத்தும் வருகிறுர்கள்.

விரும்புபவரின் கைரேகை, பெயரியல், பிறப்பியல், எண்ணியல், மனையியல் ... ஆராயப்பட்டு அவர்க்குரிய தொழில், வாழிடம், வாழ்நிலை, உறவுநிலை, உயிர்நிலை, வழிபடு தெய்வம், வழிபாட்டு முறை, சித்தியாகக் கூடிய கலைகள் ... முதலியவை கற்றுத் தரப்படும். ஓகம், தவம், ஞானம், பத்தி, ... முதலிய பத்தி முறைகள் கற்றுத் தரப்படும். கிராம தேவதைக் கோயில்களை உயிர்ப்பித்தல், அருளிரக்கல், குறி சொல்லல், மருளாடல், ... முதலியவை கற்றுத் தரப்படும். கோயில் நிர்மாணித்தல், குடமுழுக்குச் செய்தல் கற்றுத் தரப்படும். பழம்பிறப்பு உணர்தல் கற்றுத் தரப்படும். இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் உரிய முறையில் தொடர்பு கொண்டு கற்றும், பிறர்க்குக் கற்றுக் கொடுத்தும் அருட்பணி புரிய வாரீர்! வாரீர்! வாரீர்! அருட்பயிர் தழைத்து நல்ல அறுவடை நல்கிஞல் அனைத்து வறுமையும் அகன்றிடும். பொன்ஞன வாய்ப்பிது என்று அழைக்கின்ருேம்.

*'மக்கட் தொண்டே மகேசன் தொண்டு',*
*'பிறர்க்கு உதவுதலே சிறந்த பூசைமுறை',*
*'வழிபாடே மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி',*
*'வழிபாட்டு நிலையங்களே மானுடத்தின் விழிகள்',*

*‘இறைமை நினைவே குறைகளை நிறைவு செய்யும்’,*
*‘நல்ல உள்ளம் வெல்வது உறுதி’,*
*‘உடம்பை வளர்த்தேனே உயிரை வளர்த்தேனே’,*
*‘மதமும் அறிவியலும் மனித சமுதாயத்தின் கண்கள்’,*
*‘அருளாளர்கள் அனைவரும் ஒன்றே’,*
*‘சமயம்தான் சமுதாயத்தின் உயிர்நாடி’,*
*‘சமயம்தான் அரசின் அடிப்படை’,*
*‘மனிதனே விண்ணுலகும் சேர்ந்தாளும் கடவுள்’,*
*‘இறைமையின் இருப்பிடங்களே சித்தர்கள்’,*
*‘அல்லன வெல்லாம் நல்லனவாக்குவோர் அடியார்’,*
*‘அண்டத்தைப் பிண்டமாக்கியோர் சித்தர்’,*
*‘அன்புடையார் எல்லாம் உடையார்’,*
*‘அன்புநெறியே உயர் நெறி, உயிர் நெறி’,*
*‘எப்போதும் பிறர்க்கு நன்மை செய்’,*
*‘எல்லா மதங்களும் இறைவனின் அருளால் பிறந்தவையே’,*
*‘கடவுள் நமக்குத் தலைவரல்லர், தொண்டராவார்’*

... என்பன போன்ற சித்தர் நெறித் தத்துவங்களைச் செயலாக்கவே கடவுளை வழிபடுவோர் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. எனவே, வாழும் வரை உடல்நலம், உளநலம், உயிர்நலம், உறவு நலம் பேணிட அருட்கலை பயில; அருட்தொண்டு ஆற்றிட கடவுளை வழிபடுவோர் கழகத்தில் அங்கத்தினர் ஆகுங்கள்.

பிறவிக் குருடனுக்குப் பச்சை சிவப்பு வண்ண வேறுபாடு தெரியாது என்பதற்கேற்ப; இன்றைய சமுதாயம் கடவுள் மறுப்பு, வெறுப்பு, பகைப்பு, எதிர்ப்பு, ... முதலிய தவறான கருத்துக்களால் பாழ்பட்டுக் கிடக்கின்றது. அதாவது, சமுதாயம் புரையோடிப் போன புண்பெற்று விட்டது. உடனடியாக மருத்துவம் செய்தேயாக வேண்டும். இதற்காகத் திருவுள ஒப்புதலும் குருவாணையும் பெற்ற மருத்துவர்கள் தயாராக வேண்டும். தனிமனிதர்களை அழைத்துச் சித்தர்களின் கலைகளின் மூலம் அவர்களைத் திருத்தி; அவர்களையும் அருள்மேகமாக ஆக்கும் பணியையே

கடவுளை வழிபடுவோர் கழகம் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு மேகங்கள் மிகுந்து நல்ல அருள்மழை எல்லா இடங்களிலும் பொழிந்து உலகம் தழைக்கச் செயலாற்றிட அழைக்கிறது கடவுளை வழிபடுவோர் கழகம்.

திருவருட் செல்வர்கள் காலங்கள் தோறும் உலகின் ஏதாவது ஒரு மூலையில் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். கடலலைகளைப் போல் கடவுளின் அருட்செல்வர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். கடலலைகளின் காற்றும் நீரும்தான் உலகைக் குளுமையாக்குகின்றன, வளம் பெறச் செய்கின்றன. அதுபோலத் திருவருட் செல்வர்கள்தான் மானுட இனம் பண்பும் அன்பும் உண்மையும் பாசமும் பற்றும் நேர்மையும் உறவும் ... பூண்டு வாழச் செய்கின்றனர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் பொருளாகவும், அருளாகவும் இருந்தவன் ஆலவாய் அழகன், அவிர்சடைக் கடவுள், அரவம் சூடியவன், ஆறணிந்தவன், அழல் நிறத்தவன், ஆலமர் கடவுள், சொக்கன். அவனது தலைநகரில்தான் முதன்முதல் கடவுளை வழிபடுவோர் கழகம் ஆரம்பிக்கப் படுகிறது.

ஏறத்தாழ ஆயிரமாண்டுகட்குப் பிறகு மீண்டும் அருள் வித்துக்களை விதைத்து அருட்பயிர் விளைவிக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது இப்போது. இப்பணி களைத்துச் சலித்துத் தன்னம்பிக்கை நலிந்து சோர்ந்து கிடக்கும் மக்களைக் களிப்பூட்டி, உற்சாகப்படுத்தி உழைக்கச் செய்திடும். எனவே, அனைவரும் இம்மாபெரும் “மறுமலர்ச்சிப் பணியில்” பங்கு பெறல் வேண்டும் என்பதற்காகவே கடவுளை வழிபடுவோர் கழகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஏன் பிறக்கிறோம்? ஏன் இறக்கிறோம்? ஏன் வெல்கிறோம்? ஏன் தோற்கிறோம்? ஏன் நோயுறுகிறோம்? ஏன் துன்பப் படுகிறோம்? ... என்றெல்லாம் எண்ணிப் பாராமல் இரவு பகலாகப் பொருள் சேர்ப்பதிலும், உறவுகளை வளர்ப்பதிலும், புகழீட்டுவதிலும், ... காலத்தைக் கடத்தும் குருடர்களுக்கும் கண் கொடுப்போம்.

உயர்வு, தாழ்வு, வறுமை, தீண்டாமை, பசி, பட்டினி, ஏமாற்றம், ஏக்கம், கொலை, கொள்ளை, களவு, பேராசை, ... முதலியவைதான்

எல்லாத் துன்பங்களையும் கட்டிக் காக்கின்றன. இவற்றைக் கடப்பது இறையருளால்தான் முடியும். அதற்குரிய எல்லா வழிவகைகளையும் கடவுளை வழிபடுவோர் கழகம் செய்யும்.

இந்த நாட்டில் 'வேதவித்துக்கள்', 'மறை வித்துக்கள்', 'முறைவித்துக்கள்', 'நெறி வித்துக்கள்', 'தவவித்துக்கள்', 'வேள்வி வித்துக்கள்', 'மந்திற வித்துக்கள்' ... நம்மால் தயாரிக்கப்பட்டு; அந்த வித்துக்கள் உலகெங்கும் முளைக்க வைக்கப்பட்டு; அவை கிளைத்துச் செழித்து வளர்ந்து குளிர்ந்த நிழலும், மணமிக்க அழகிய மலர்களும், சுவைமிக்க காய்கனிகளும், ஆற்றல்மிகு மூலிகைகளும் ... வழங்கிடல் வேண்டும்.

நாம் மேற்படி விதைப் பண்ணைகளை உருவாக்க வேண்டியவர்கள். ***மருந்தால் தீராத நோய்கள் ஏராளம். ஆனால், தெய்வீகக் கலைகளால், கடவுட் கலைகளால், பேய்க்கலைகளால், நோய்க்கலைகளால், தேய்கலைகளால், அருட்கலைகளால், ஆயகலைகளால், ... தீராத நோய்களே இல்லை*** என்பதை நாம் மெய்ப்பிப்போம். எனவே, நமது சித்தர் நெறி, ஓர் அநுபவச் சித்தாந்தம்; அன்றாட வாழ்வில் அல்லல்களை அகற்றும் அருமருந்து. இவற்றை உணர்த்தித்தான் மக்களை விழிச்சிக்கும், எழிச்சிக்கும், புரட்சிக்கும் தயாரிக்க வேண்டும்.

[26]பகுத்தறிவுவாதிகளாயும், [27]புதுமை விளைவிக்கும் சீர்திருத்த வாதிகளாயும், [28]புரட்சி வாதிகளாயும் உள்ள சித்தர்களின் தத்துவங்களைச் செயலாக்கும் மாவீரர்களை உருவாக்கும் குருகுலம், அருவுருவ வெட்டவெளிக் கருவறை கொண்ட சனீசுவரர் தேவாலயத்தின் சூழலில் அமைக்கப் பட்டிருக்கிறது. அதற்குரிய இறைமையாற்றல் ஊற்றெடுக்கும் அருள் ஊற்றுத்தான் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்.

இம்மண்ணுலகில் தோன்றிய, தோன்றுகிற, தோன்றப் போகிற எல்லா மதங்களுக்கும் சித்தர்களின் தத்துவங்களும் சாதனைகளும்தான் தாயாக உள்ளன. **மனிதனைப் படிப்படியாக உயர்த்திக் கணநிலை, இருடிநிலை, முனிநிலை, அமரர் நிலை, வானவர் நிலை, ... தேவர் நிலை, தெய்வநிலை, ஆண்டவர் நிலை, கடவுள்நிலை, இறை நிலை, சித்தர் நிலை, ... என்று எல்லா நிலைகளையும் பெறச் செய்யக் கூடிய ஒரே மதம் இன்று**

**‘இந்துமதம்’ என்றழைக்கப்படும் தமிழர் மதமான ‘சித்தர் நெறி’தான்**. கடலில் எல்லா ஆறுகளும் கலப்பது போல் எண்ணற்ற மதங்கள் கலந்தாலும் இந்துமதம் தன் நிலையிலேயே இருக்கும் தன்மை பெற்றது. இப்பேருண்மை புரிந்திட்டால் கடவுள்களின் பெயரால், மதங்களின் பெயரால், சாதிகளின் பெயரால் சண்டைகள் ஏற்படவே ஏற்படாது. எல்லோரும் அமைதியாக, மகிழ்வாக, மனநிறைவாக, ஒற்றுமையாக வாழமுடியும்.

எனவே, இந்த மண்ணுலகில் என்றுவது ஒருநாள், எல்லா மனிதர்களும் நாடு, இனம், மொழி, மதம், சாதி, பொருமை, போட்டி, அதிகார வெறி, ஆணவம், ஆதிக்க வெறி, ... முதலிய இழிந்த பண்புகளையெல்லாம் விட்டுவிட்டு ஒருவரையொருவர் மதித்து, விரும்பி, அன்புசெய்து, கனிவோடு பழகி, மகிழ்வு நிறைந்த வாழ்வு வாழப் போகிருர்கள் என்ருல்; அந்த வாழ்வு சித்தர்களாலும், சித்தரடியான்களாலும், சித்தரடியாள்களாலும், சித்தரடியார்களாலும்தான் உருவாக்க முடியும். இதனை வேறு எந்த ஒரு மதமோ! கொள்கையோ! அரசியல் தத்துவமோ! உருவாக்கிட முடியாது. எனவே, எல்லாரும் கடவுளை வழிபடும் கழகத்தில் உறுப்பினராகி தங்களால் இயன்ற அளவு திருத்தொண்டு அருட்தொண்டு புரிய அழைக்கின்ருேம்.

இந்துமதத்தில்தான், எல்லாக் காலங்களிலும் நாடு முழுதும் ஆங்காங்கே அருளாளிகள், மருளாளிகள், சாமியாடிகள், குறிகாரர்கள், வெறியாடுபவர்கள், சித்தியாளர்கள், சீவன்முத்தர்கள், தோன்றல்கள் (அவதாரம்), ஞானிகள், பத்தர்கள், பத்தியார்கள், தேவதூதர்கள், தவசிகள், ... தோன்றித் திருவருட் செயல்கள், இயற்கை யிறந்த ஆற்றல்கள், சித்து விளையாடல்கள், மாயங்கள், ... செய்து கடவுள் நெறி தழைக்கும் பணி நிறைவேறுகின்றது. இதற்குக் காரணம் வாழையடி வாழையாகத் திருவருட் செல்வர்கள் தோன்றிக் கொண்டிருக்கும் இறையருள் வளம் குறையாது இருப்பதுதான்.

சித்தர்களின் கலைகளையும், அறிவியல்களையும் செயலாக்கிடுவோம். தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டைதான் மானுட சமுதாயத்தின் சொர்க்கம். இந்த நம்பிக்கை ஒவ்வொரு தமிழனுக்கும்

ஏற்பட்டாக வேண்டும். எனவே, ஒவ்வொரு தனிமனிதனையும் இழிந்த பண்புகளிலிருந்தும் காப்பாற்றுகின்ற ஆற்றல் சித்தர்களின் தத்துவங்களுக்கும், கலைகளுக்கும், அறிவியல்களுக்கும்தான் உண்டு. தனிமனிதர்கள் திருத்தப்பட்டால்தான் மிகப்பெரிய சமுதாய இயக்கம், அறிவியல் போக்கு முதலியவைகளை யெல்லாம் நிலையான ஒழுங்குக்குரியனவாக ஆக்க முடியும் என்பதை முழுக்க வலியுறுத்துவதே கடவுளை வழிபடுவோர் கழகம்.

மனித உயிர்கள் பிறவித் துன்பத்தால் தொல்லைப்பட்டுத் துயரமடையாமல் காக்கும் அரிய பெரிய சீரிய பணி சித்தர்களால்தான் செய்யப்படக் கூடியது. இப்பணி வீரமாகாளி சன்னிதானத்தின் மூலம் தொடர்ந்து ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் கிடைக்குமாறு செய்யப் பட்டுள்ளது. எனவே, அருள்வேண்டுவோர், அருட்பயன் துய்த்தோர்... தொடர்ந்து வீரமாகாளி சன்னிதானம் வந்து எல்லா நன்மைகளும் பெற அழைக்கின்றோம்.

'தினை விதைத்தவர் தினையறுப்பர்! வினை விதைத்தவர் வினையறுப்பர்' என்ற பேருண்மையினை நாட்டு நடப்பில் நன்கு உணரலாம். நம் காலத்தில் சமய, சமுதாய, அரசியல், பொருளாதார ... வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள்... முதலியவை முழுமையாக அகன்று எங்கும் சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடமை, நிறைவு, நிம்மதி, மகிழ்வு, அன்பு ... தழைத்தோங்க வேண்டும். இவற்றிற்கான ஆக்கப் பணிகளை நம்மவர்கள் ஊக்கத்தோடு மேற்கொள்ள வேண்டும். இம்மண்ணுலகிலுள்ள அனைத்து மதங்களின் ஆரம்பத்தையும், முடிவையும் விளக்கி யுரைத்து மெய்ப்பிப்பதே கடவுளை வழிபடுவோர் கழகம்.

**(Footnotes)**

[1] Aboriginates of India

[2] Board, Council, Society

[3] All the research will be carried out with a Rationalistic approach and in a Scientific Atmosphere

[4] Religious Knowledge

[5] To have a strong-hold in Social Culture

[6] Medical Knowledge

[7] Knowledge in History

[8] Knowledge in Literature

[9] Aim and Attitude

[10] The Siddhar Medical Research Society

[11] The Indhu Religious Development Mission

[12] The World Religious Research Society

[13] The Siddhar Theosophical Research Society

[14] The Research Society of the Tamilnadu History

[15] The Divine Research Society

[16] Pathinen Siddhar Research Society of Culture, Mysticism, Medicine, History, Literature

[17] Superstitious Beliefs

[18] Induism is a mere word which denotes the religion of the Indians.

[19] Siddharism

[20] Proves and Evidences

[21] Indhuism is a Religion of Magicians and it lives through Miracles.

[22] All the Miracles have temporarial effects.

[23] Religion of Rationalism

[24] ஆலயத்தில் நடப்பது தொழுகை.

[25] கோயில்களில் நடப்பது பூசை (வழிபாடு). ஆலயம் வேறு; கோயில் வேறு; ‘ஆலயம் கோயிலாச்சுதடி குதம்பாய்’

[26] Rationalists

[27] Radicalists

[28] Revolutionists

# கருவறைச் சாத்திரம்

**வழிபடுநிலை பெற்றோர்:**

1. இறை,
2. கடவுள்,
3. ஆண்டவர்,
4. பட்டவர்,
5. தெய்வம்,
6. தாத்தா,
7. ஆத்தா,
8. அப்பன்,
9. அம்மை,
10. அமரர்,
11. விண்ணவர்,
12. வானவர்,
13. தேவர்,
14. தேவதை,
15. தேவியர்,
16. இருடி,
17. முனிவர்,
18. ஈசுவரர்,
19. கிண்ணரர்,
20. கிம்புருடர்,
21. கணங்கள்

... எனப்படும் மண்டலப் படியார்கள் வழிபடுநிலை பெற்றோர் அதாவது 48 வகையினர்.

**அருவ உருவ அருவுருவ நிலையினரின் தொகை:**

ஆயிரங் கோடி தேவதைகள்,

முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்கள்,
நாற்பத்தெண்ணாயிரம் கோடி இருடிகள்,
தொண்ணூற்று ஆறுயிரம் கோடி கணங்கள்
... என்போர் அருளாட்சிப் பணியாளராவர்.

**கருவறைப் பீடங்கள்:** (கருவறைக் குழி வடிவம் உட்பட)

சிவன் = வட்ட வடிவப் பீடம்

திருமால் = முக்கோணப் பீடம்

பிறமண் = சதுரப் பீடம்

சத்தி = ஐங்கோணப் பீடம்

முருகன் = அறுகோணப் பீடம்

பிள்ளையார், ஆஞ்சநேயர் = நீண்ட சதுரப் பீடம் (செவ்வகம்)

தேவதை = காளி, மாரி, செல்லி, பகவதி, பச்சையம்மன், பாவாடைக்காரி, பூவாடைக்காரி, இயக்கி, முத்தாலம்மன், கண்ணாத்தம்மன், ... 243 வகையினர்

= எண்கோணப் பீடம்

தேவர் = ஐயனார், கருப்பு, காரணமூர்த்தி, சன்னாசி, பண்டாரம், முனீசுவரர், வீரன், சூரன், இருளன், வேட்டைக்காரன், காடன், மாடன், மகாமுனி, ... 243 வகையினர்.

= இவர்களுக்கும் எண்கோணப் பீடம்.

முதல் உகத்தில் 'ஆலமரமும்', இரண்டாவது உகத்தில் 'வேப்ப மரமும்', மூன்றுவது உகத்தில் 'அரசமரமும்' ஞானம் வழங்கும் சாதனமாகப் பயன்படுத்தப் பட்டன. இந்த நான்காவது உகத்தில், கலியுகத்தில் இவை மூன்றும் ஒன்றாக நடப்பட்டு இவற்றின் கீழ் கருவறைகள், மூலவர்கள், எழுந்தருளிகள், சமாதிகள், பீடங்கள் ... அமைக்கப்படல் வேண்டும். இதன் முன் வழிபாடு செய்வோர் நலிவெல்லாம் நீங்கப் பெறுவர்.

பூசை, வழிபாடு, கும்பிடுதல், வணங்குதல், பாடுகிடத்தல், முறையிடுதல், அரற்றுதல், தவமிருத்தல், [1]ஐந்தீ வேட்டல் முதலியவற்றில் எதனை எவர் கைக்கொள்வது என்பதனை குருவழியே உணர்தல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் 'கருவழி' உண்டு. இது 'வமிசாவழி', 'பாரம்பரியம்', 'முன்வினை', 'ஊழ்வினை', 'முற்பிறவிப் பயன்', 'பழம்பிறவிப் பயன்' என்ற சொற்களால் குறிக்கப்படுகின்றன.

1. கருவறைச் சாத்திறம்,
2. கருவறை மறை,
3. கருவறை முறை,
4. கருவறை நெறி,
5. கருவறை வேதம்,
6. கருவறை உயிர்ப்பு நூல்,
7. கருவறை ஆகமம்,
8. கருவறை ஞானம்,
9. கருவறைத் தவம்,
10. கருவறைப் பூசை,
11. தெய்வக் கருவறை விதி,
12. தேவக் கருவறை விதி,
13. பூதக்கருவறை விதி,
14. மானுடக் கருவறை விதி,

... முதலிய நூல்கள் மிகவும் சிறப்பாகக் குறிக்கப் படுகின்றன.

[2]பதின்மூன்று வகைப்பட்ட திருவருட்செல்வர்களை உருவாக்குவதற்காகவே சித்தர்கள் கருவறைகளை உருவாக்கினுர்கள். இக்கருவறைகளுக்குரிய மூலவர்களை உயிர்ப்பித்தல் போல்,

1. எழுந்தருளி உயிர்ப்பு நூல்,
2. எழுந்தருளி சாத்திறம்,
3. [3]பாவை உயிர்ப்பு நூல்,
4. பாவை உயிர்ப்புச் சாத்திறம்,
5. குடமுழுக்கு உயிர்ப்பு நூல்,

6. குடமுழுக்கு உயிர்ப்புச் சாத்திறம்,

... முதலியவற்றை உயிர்ப்பித்திடச் சாத்திறங்களை உருவாக்கியுள்ளார்கள் சித்தர்கள்.

காலங்கள் தோறும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு செயல்படும் சித்தர்களும், அவர்தம் விந்துவழி வாரிசுகளும் நேரில் உரிய மந்தர, மந்திற, தந்திற, எந்திறங்களை அருளுவார்கள்.

**வெட்டவெளிக் கருவறைகள்:**

சுற்றுச் சுவர் இல்லாமல் இருப்பவையும், சுற்றிலும் தூண்கள் எழுப்பி மேலே கோபுரம் கட்டிச் சுற்றிலும் மரப்பலகையால் அடைக்கப்படுபவையும், கோபுரத்தில் [4]குடம் வைக்கப்படாதவையும், வெட்டவெளிக் கருவறைக் கோயில்கள் எனப்படும்.

இவற்றை உயிர்ப்பிக்கத் தனிப்பட்ட நூல்கள் உண்டு. அவை செவிவழிச் செய்தியாக இருக்கின்றன.

திருவருட்செல்வர்கள், பெருவீரர்கள், கொடையாளர்கள், அருளாளர்கள், அறவாணர்கள், அம்பலவாணர்கள், கலைவாணர்கள், [5]ஈகவாணர்கள்... முதலியவர்களின் புதைகுழிகளின் மேல் கட்டப்படுபவையும் வெட்டவெளிக் கருவறைக் கோயில்களாகக் கருதப்படுகின்றன. இது தவறு. மேற்படி இடங்களில் சித்தர்களின் சாத்திற தோத்திறப்படி கருவறைகள் அமைக்கப்பட்டிட்டால்தான் இவை 'வெட்டவெளிக் கருவறைக் கோயில்கள்' ஆகிடும்.

இந்த உலகில் தோன்றிட்ட எல்லா மதங்களுமே 'முன்னோர் வழிபாடு' என்ற தத்துவத்தை உயிர்நாடியாக, உள்ளீடாக, அடிப்படையாகக் கொண்டுதான் வளர்ந்திருக்கின்றன. எனவே, எல்லா மதங்களுமே அருளாளர்களைப் போற்றிப் பேணி வழிபடுதலையே விழியாகக் கொண்டு வாழ்வு பெறுகின்றன என்பது தெளிவாகிறது. இதற்குச் சித்தர்கள் படைத்த கருவறைச் சாத்திறங்கள் பற்றிய அறிவும் பயிற்சியும் பரவிடல் பெருநன்மையாகும்.

தனிமனிதர்களின் பிறப்பும், இறப்பும் முறையாக ஆராயப்படுவதற்காகவே [6]'மனிதக் கருவறை' பற்றிய சாத்திரங்களை தோற்றுவித்தார்கள் சித்தர்கள். இவை

'மோகநூல்',
'மோக சாத்திரம்',
'மணநூல்',
'மணசாத்திரம்',
'போகநூல்',
'போகசாத்திரம்',
[7]'ஐந்திற சாத்திரம்',
[8]'வரியியல் சாத்திரம்',
[9]'பெயரியல் சாத்திரம்',
[10]'எண்ணியல் சாத்திரம்',
[11]'அங்கவியல் சாத்திரம்',
[12]'மனையடி சாத்திரம்',
'தொடுகுறி சாத்திரம்',
'விரிச்சி சாத்திரம்',
'கனுசாத்திரம்',
'கனுநூல்',

... எனப் பலவகைப் படும்.

இவைகளை யெல்லாம் ஏட்டுக் கல்வியாகவும், நேர்முகப் பயிற்சிக் கல்வியாகவும் ஆக்கிடுதற்காகவே 'கடவுளை வழிபடுவோர் கழகம்' தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் எண்ணற்ற சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் அருள்வழங்கு திருவருட்செல்வர்களாக உருவாக்கியுள்ளார்கள். நாடெங்கும் சன்னிதானங்கள், ஆதீனங்கள், பீடங்கள், அமளிகைகள், இருக்கைகள், திருவடிகள், ... மருளாடு நாயகங்கள், அருளாடு நாயகங்கள், பூசாறிகள்,

குருக்கள்கள், பண்டாரங்கள், ஆண்டிகள், ஆண்டவர்கள், ... குறிகாரர்கள், வெறியாட்டக் காரர்கள், அருளாளிகள், மருளாளிகள், ... எனப் *பல* ***திறத்தார்களும், தரத்தார்களும்*** உருவாக்கப்பட்டு அருள்மழை பொழிய ஆரம்பித்துவிட்டது. அருட்பயிர்கள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர ஆரம்பித்துவிட்டன. இவை நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலை உண்டாக்கிக் கொழுத்த அறுவடையை நல்கும்போது; இம்மண்ணுலகின் பழுதுகள் எல்லாம் அகற்றப்பட்டிடும்.

அருட்பயிர்கள் விளைவிக்கும் பணியில் ஆர்வமுள்ளவர்கள் ஈடுபடலாம். சாதிமத வேறுபாடின்றிக் கடவுள் நம்பிக்கையுள்ள அனைவரையும் அழைக்கின்றோம். ஊழ்வினை, விதி, மதி, மானுட முயற்சி, ... எனும் அனைத்தையும் செம்மைப்படுத்தி அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்திக் கொள்ள நானிலத்தீரே வாரீர்! வாரீர்!! வாரீர்!!!... நும் வரவு நல்வரவாகுக.

ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தேழு விண்மீன்களும்... ஆக (9+12+27=) 48உம் ஆட்டிப் படைக்கும் மானுட வாழ்வின் நுட்பங்களை உணர்ந்து திட்பமும், ஒட்பமும் நிறைந்த வாழ்வைப் பெறக் கடவுளை வழிபடுவோர் கழகத்தில் உறுப்பினராகுங்கள்.

பெருநகர் முதல் சிறு குக்கிராமம் வரை 'கடவுளை வழிபடுவோர் கழகத்தின்' கிளைகள் அமைக்கப் படட்டும். அப்பொழுதுதான், வழிபாட்டு நிலையங்கள் தோறும் ('கோயில்'), ஆறுகாலப் பூசைகள் சிறக்கும்; ஒவ்வொரு தனிமனிதர் உள்ளத்துள்ளும் அருட்சுடர் ஒளிவிடும். ஒவ்வொரு குடும்பத்திலும் அருளொளி பரவிடும். இவற்றால் தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும், அரசியல் வாழ்வும்... ஒழுங்குபட்டு, முழுமைப்பட்டு, நிறைவடைந்திடும்.

மண்ணில் விண்ணைக் காணக் 'கடவுளை வழிபடுவோர் கழகம்' கண்ணுகிடும்.

உங்களின் நலிவுகளை, குறைகளை, வாட்டங்களை, நாட்டங்களை ... அருட்பணியில் இணைந்து செயலாற்றிச் சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

விருப்பாற்றலும், உழைப்பாற்றலும் உடைய பத்தர்களே வருக! வருக!! வருக!!!

**(Footnotes)**

[1] பஞ்சாக்கினி = ஐந்தீ = ஓமம், ஓகம், யாகம், யக்ஞும், வேள்வி

[2] 1.பத்தர், 2.பத்தியார், 3.போத்தர், 4.போத்தியார், 5.புத்தர், 6.புத்தியார், 7.முத்தர், 8.முத்தியார், 9.சீவன்முத்தர், 10.சீவன்முத்தியார், 11.அருவசித்தியார், 12.உருவசித்தியார், 13.அருவுருவச் சித்தியார்.

[3] கோபுரத்தில், தேரில், பல்லக்கில், வாகனத்தில் வைக்கப்படுபவை.

[4] கும்பம், கலசம், கலயம்.

[5] ஈகப்பெரியார் = ஈகம் புரிந்த மாவீரர்.

[6] கருப்பை, கர்ப்பப்பை

[7] ஐந்திறம் = பஞ்சாங்கம்

[8] Palmistry

[9] Nameology

[10] Numerology

[11] உறுப்பிலக்கணம் = a Science of Prediction by the study of the Physical Structure

[12] மனையியல் = a Science of Prediction by the study of the House i.e. living place.

# கடவுளை வழிபடுவோர் கழகம் அறிக்கை

# முடிவுரை

## ஞானத்தெளிவு

### 12/7/1980இல் குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரர் விடுக்கும்

### *உலகியல் விளக்க உரை*

வரலாறு சுட்டிக் காட்டும் மதத் தலைவர்கள் அனைவருமே! ஏற்கனவே இருந்திடும் பழைய மதத்தவர்களின் எதிர்ப்புக்கும் மறுப்புக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகித்தான் செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளார்கள்.

மந்திர மாயங்களோ! அற்புதங்களோ! இயற்கையிறந்த ஆற்றல்களோ! ... புதிய மதத்தை வளர்த்திடவில்லை; வடிவப்படுத்தி வாழ்வுறுத்திடவில்லை. ஆனால், எதிர்ப்புகளை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டுக் காலத்தை வென்று வாழும் வல்லமையை வழங்கியவை தத்துவங்களும், மனித உணர்வுகள் புரிந்து விரும்பி ஏற்றுப் போற்றும் நடைமுறைகளும்தான். வாழ்க்கையில் புதிய நம்பிக்கை; நலிவு அகன்று வலிவு பிறக்கும் கருத்து; அயர்வும், சோர்வும், தளர்வும், சலிப்பும், களைப்பும் ... நீக்கிக் களிப்பைத் தரவல்ல சடங்குகள்; புதிய புதிய நட்புகளையும் சூழல்களையும் தரக்கூடிய விழாமுறை; உடல்நலத்தையும் உளநலத்தையும் பேணி வளர்க்கும் பூசாவிதிகள்; வாழ்வில் அன்பும், இன்பமும், அமைதியும், நிறைவும், நிம்மதியும் ... தரக்கூடிய பழக்கவழக்கங்கள்; மனித உணர்வின் நளினங்களையும் மென்மைகளையும் உண்மையாக வளர்க்கும் நம்பிக்கைகள்; மனிதவாழ்வின் எல்லாச் சுவைகளையும் நன்கு சுவைத்து வாழவகை செய்யும் உரம்பெற்ற தத்துவங்கள் ... முதலியவற்றை வழங்கும் மதங்கள்தான் வாழ்வாங்கு வாழும் வல்லமையைப் பெற்றிடுகின்றன.

பிறரைத் தாயுள்ளத்தோடு கண்டிப்பதுதான் சமயம். அன்றி, அரசநிலையில் தண்டிப்பது சமயமல்ல. அச்சுறுத்தல் சமயத்தின்

ஆணிவேரல்ல. இச்சகப் படுத்தல் சமயமெனும் பழமரம் பருவத்திலே காய்த்துக் கனிவித்துத் தரும் கனியே.

கொலைகளுக்கும் தற்கொலைகளுக்கும் இளமையின் வேகங்களும், தாகங்களும், ஏக்கங்களும், கரையிறந்த போக்குகளுமே காரணம். இவற்றை நியாயப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, கட்டுப்படுத்தி சமுதாய நெறியாக, மரபாக, சடங்காக ... ஆக்கித் தருவதுதான் சமயம். இப்பேருண்மையினை மென்மையான, செம்மைப்பட்ட, மேம்பட்ட உணர்வாக ஆக்கிய தத்துவம்தான் "மன்னிப்பு", "பாவமன்னிப்பு", "பரிகாரம்" ... முதலியவை. இவற்றை உணராதவர்கள் இவைதான் சமயம் என்ற தவறான முடிவுக்கு வந்து விடுகின்றார்கள். அப்போதுதான் சமய வெறுப்பு, மறுப்பு, எதிர்ப்பு ... முதலியவை முளைக்கின்றன.

"தவறுகளுக்குத் தண்டனையும், நேர்மையானவைகளுக்குப் பரிசும் வழங்குவதுதான் சமயம்" என்று சுருக்க விளக்கம் தருவதால்தான் மனிதக் கோணல் உணர்வுகளும், குறுக்குப் புத்திகளும் நாத்திகம் பேச முற்படுகின்றன. எல்லையில்லாத மனித உணர்வுகளுக்குத் தொல்லைகளும் எல்லையில்லாமல்தான் ஏற்படுகின்றன. இவை, முற்றிலும் இல்லை என்றாகுமாறு செய்யும் பேராற்றல் தனிமனிதர்களிடம் அவ்வப்போதுதான் வெளிப்படுகின்றன. அவை மின்னலெனத் தோன்றி மறையவே செய்கின்றன. ஆனால், வரலாறு தனது கருத்துப் பெட்டகத்தில் பொன்னென இவற்றைப் பேணுகின்றது.

தவறுகளுக்கு உடனே தண்டனை தரும் நிலையங்களல்ல கோயில்கள். வழிபாட்டுக்குரிய கடவுளர்கள் ... கொலையாளிகளோ! தண்டனை நிறைவேற்றும் அதிகாரிகளோ அல்ல. தத்துவார்த்தமாக மனிதத் தவறுகளைக் குறைக்கவும் அடக்கவும் முயல்பவைதான் மேற்கூறியவை. ஆனால், இறையாற்றலே இல்லையென்றோ! இறையாற்றல் தவறுகளைத் திருத்துவதில்லையென்றோ! ... இவற்றின் பொருளல்ல. காலமும் கருத்தும் துணையாகக் கொண்டே கடவுளர் ஆட்சி நடக்கும்.

தனிமனிதர்களின் தவறுகளேயும், முறைகேடுகளேயும், கொடுமைகளேயும், தீமைகளேயும், அநீதிகளேயும், இழிசெயல்களேயும், அழிவு வேலேகளேயும் ... மனிதாபிமானத்தோடு கண்டிக்கவும் திருத்தவும் முற்படுவதுதான் சமயம்.

ஏழைகளின்பால் இரக்கம், நலிந்தவர்களிடம் அன்பு, அனுதைகளுக்கு ஆதரவு, அல்லல்படுபவர்களுக்கு ஆறுதல், அறிவியலால் தீர்த்து வைக்க முடியாதவைகளே ஆண்டவன் பெயரால் தீர்த்து வைக்கும் அருள், ஏமாற்றப் படுபவர்களுக்காகப் பரிந்து செயல்படல்; சுரண்டப் படுபவர்களுக்காகப் போராடல், அடிமைகளின் உரிமை காக்கப் பாடுபடல், நோயாளிகளுக்காக மருந்தாதல், பசித்தவர்க்கு விருந்தாதல் ... முதலியவை எல்லாம் ஆதிக்கக் காரர்களால், முதலாளித்துவச் சத்திகளால், பழமை விரும்பிகளால், பொருமைக் காரர்களால், சுயநலக் காரர்களால் ... சூழ்ச்சி செய்யப்பட்டு வீழ்ச்சி யுற்றதைத்தான் வரலாறு விளக்குகின்றது. சிலுவைகளும், நச்சுக்கோப்பைகளும், தூக்குக்கயிறுகளும், கொலேமேடைகளும், நெருப்புக் குண்டங்களும் ... அருளாளர்கள் ஏற நேரிட்ட படிக்கட்டுகளாயின என்பதைச் சமய மாளிகையின் வாயில்கள் விளக்குகின்றன.

இம்மண்ணுலகம் தோன்றி ஐந்நூறு கோடி யாண்டுகள் ஆகின்றன என்றும்; மானுட இனம் தோன்றிப் நாற்பத்துமூன்று நூருயிரமாண்டுகள் [நாற்பத்துமூன்றே முக்கால் இலட்சமாண்டுகள்] ஆகின்றன என்று வரலாறு கூறும் சித்தர்நெறி; **பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இன்றுவரை பன்னிரண்டு பேர்கள்தான் தோன்றியிருக்கிருர்கள் என்கிறது. அப்படியாளுல்...?!?!? ... நீங்கள் வாழும் காலம் எவ்வளவு சிறப்பானது! முதன்மையானது! அருமையானது! அரியது! ... உங்கள் கால மக்கள் இவற்றை உணர்வார்களா?!?!?! ... உணரும்போது என்னவாகும்?! ...**

பயணத்தில் சில ஆயிரம் பொற்காசுகளே வைத்திருப்பவன் அதன் மதிப்பை எண்ணியெண்ணி எப்படி யெப்படி யெல்லாம் பரபரப்பான பொறுப்பையும், அமைதியற்ற அடக்கத்தையும், இச்சை மிகுந்த

அச்சத்தையும் ... பெற்றிருப்பான். அதுபோலவே, பல கோடிக்கணக்கான காலமதிப்பும், கருத்து மதிப்பும், அரிய பயனும், பெரிய உண்மையும், மானுட உயிர்களின் உய்வுக்குரிய அமுதத் தன்மையும் ... உடைய கலைகளையும், அறிவியல்களையும், உண்மைகளையும் வாழ்க்கைப் பயணத்தில் சுமக்கும் நான் பரபரப்பும், விருவிருப்பும், சுறுசுறுப்பும், அச்சமும், இச்சையும், அமைதியற்ற நிலையும், பொறுப்பும், ஆர்வமும், அடக்கமும் ... கலந்த ஒரு நிலையிலேயே வாழுகிறேன். எனவே, அவசரமோ! ஆத்திரமோ! பொறுமையிழப்போ! விரைவோ! செயலுக்கு எதிர்ச் செயலோ! ... என்னுள்ளும் நிகழக் கூடாது; என்னால் பிறருள்ளும் நிகழ்ந்து விடக்கூடாது.

ஆத்தாள் அருளாட்சி பெற்று விட்டதால்; அவள் பொறுப்பில் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு அடக்கத்துடனும், பொறுமையுடனும் அமைதியாகச் செயல்படலே நம்மனைவரின் கடமையாக இருத்தல் வேண்டும். யாரும், எதையும் எதிர்ப்பாகவோ! மறுப்பாகவோ! இழிவாகவோ! இழப்பாகவோ! அழிவாகவோ! கருதத் தேவையே இல்லை. “உலைவாயை மூடலாம்! ஊர்வாயை மூடமுடியாது”. காலத்தாலும், அவரவர் அநுபவத்தாலும் நம் கருத்துக்களின் திருத்தமும் பொருத்தமும் பொருளும் பயனும்... பிறரால் உணரப்பட்டிடும். மலைமுகடுகளில் நின்றும், அலைகடல்களில் தவழ்ந்தும், நெடிய பசிய காடுகளில் உலவியும், நாடோடியாய்த் திரிந்தும்... ஊழால், விதியால், வினையால் உருப்பெற்றவையே எமது கருத்துக்கள். இவைகள் பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றுவிட்டவை. இவை, அரியன பல ஈன்றெடுக்கும் தாய்மை ஆற்றலுடையவை.

தனிமனிதர்களின் தவறுகள் இந்துமதத்தின் தவறுகளாக மிகப்பெரிய அளவில் சித்தரித்துக் காட்டப்படுவது இன்றைய இந்தியர்களின் போக்காக இருக்கின்றது. இது, இவர்களுக்குத் தங்களின் மதத்தின் மீது ஏற்பட்ட சலிப்பு, அலுப்பு, புளிப்பு, நம்பிக்கை, நலிவு, ... முதலியவைகளின் விளைவே ஆகும். இதற்குக் காரணம், இன்றைய இந்துமதம் முதலாளிகள் மேலும் மேலும் முதலாளிகளாக வளரவும்; ஏழைகள் மேலும் மேலும்

ஏழைகளாகி நலிவுறவும்; மேட்டுக்குடி மக்கள் சமுதாயத்தில் என்ன தவறு செய்த போதிலும் உயர்ந்தவர்களாகவே வாழவும்; கீழ்க்குடி மக்கள் என்ன உயர்சாதனைகளைச் செய்த போதிலும் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாகவே இழிந்து இன்னல்பட்டு வாழவும்; ஏமாற்றுபவர்கள், சுரண்டல்காரர்கள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், சமுதாயத் துரோகிகள், ... முதலியோரெல்லாம் சமயத்தின் ஆதரவால் பெரிய மதிப்பையும், மரியாதையையும் பெற்றுப் போலிவாழ்வு வாழ நேரிடவும் வகை செய்கின்றது. இந்த நிலை காலப்போக்கில் ஏற்பட்டதே தவிர இந்துமதத்தின் அடிப்படையிலோ! உள்ளீட்டிலோ இல்லவே இல்லை. எனவே, இந்துமதத்தைச் சீர்திருத்த, செம்மைப்படுத்த ... வேண்டிய இன்றியமையாப் பணியே துவக்கப்பட்டிருக்கிறது இன்று.

இந்துமதத்திலுள்ள உயரிய தத்துவங்களும், பயன்மிகு பழக்கவழக்கங்களும், நேரிய பயிற்சி தரும் நம்பிக்கைகளும், கொள்கைகளும், குறிக்கோள்களும் ... காலப்போக்கில் அவற்றின் உண்மைகளை யிழந்து தவறான கற்பனைகளுக்கும் கதைகளுக்கும் உரியவைகளாகி விட்டன. இதற்காகக் கோயில் ஊழியர்களுக்கும், சமயக் கலைஞர்களுக்கும், சமய ஆர்வலர்களுக்கும் ... பகுத்தறிவு விளக்கங்கள், விஞ்ஞான முறையிலான விளக்கங்கள், வரலாற்று அடிப்படையிலான விளக்கங்கள், தத்துவ விளக்கங்கள், இலக்கியச் சான்றுநிறை விளக்கங்கள் ... முதலியவை வழங்கித் தேவையான செயல்முறைப் பயிற்சிகளையும் வழங்கிடும் மாபெரும் பணியை உடனே மேற்கொள்ள வேண்டும் நாம். இதற்குரிய தலைமைப் பயிற்சி நிலையமே காரியேந்தல்பட்டியிலுள்ள வீரமாகாளி சன்னிதானம். இங்குள்ள அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் ... முதலியவர்களே பயிற்சியளிக்கும் ஆசிரியர்கள்.

நீர் ஊற்று உள்ள இடத்தில்தான் விதைப்பண்ணை வைக்க முடியும்; விவசாய ஆராய்ச்சிப் பண்ணை நடத்த முடியும். அதுபோல், அருள் ஊற்று உள்ள இடத்தில்தான் சமயக் கலைஞர்களையும், திருவருட் செல்வர்களையும் உருவாக்கும் நிலையங்களை நடத்த முடியும். எனவேதான்,

எண்ணற்ற கோயில்களும், ஆலயங்களும், பீடங்களும், திருப்பதிகளும் ... இருக்கின்ற நம்நாட்டில் வீரமாகாளி சன்னிதானத்தின் அமைதியும், இயற்கைச் சூழலும் நிறைந்த இடத்தில் 'சமயக் குருகுலம்', 'ஆன்மீகக் குருகுலம்', 'ஆகமக் குருகுலம்', 'வேதக் குருகுலம்', 'சமயச் சாத்திறக் குருகுலம்', 'சமயத் தோத்திறக் குருகுலம்', 'பூசாவிதிக் குருகுலம்' ... முதலிய பல குருகுலங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் அருமையும், பெருமையும், பயனும் காலப்போக்கில் உணரப்பட்டே தீரும்.

சமய மூடநம்பிக்கையும், மடமையும், அறியாமையும், கண்மூடிப் போக்கும், பயனற்ற போக்கும், ஒருசாரார் மட்டும் சுரண்டி வாழ அநுமதிக்கும் நோக்கும்... இனியும் தோன்ருதபடி; பதினெண்சித்தர்களும், மற்ற சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்செல்வர்களும் கூறிச் சென்றுள்ள கருத்துக்களைப் பரப்பிச் சமயச் சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும் செய்து முடித்திடல் வேண்டும். இதற்காக யாரையும் மறுக்காமல், வெறுக்காமல், ஒதுக்காமல், புறக்கணிக்காமல், பகைக்காமல் ... செயல்பட்டிடல் வேண்டும்.

நாத்திகர்களும், சமய வெறுப்பாளர்களும், புறச்சமய விருப்பாளர்களும், சமயச் சலிப்பாளர்களும் ... ஏற்றுப் போற்றும் கருத்து விளக்கங்களும், பூசை நடைமுறைகளும், சடங்குகளும், சாத்திறங்களும், தோத்திறங்களும் ... அமைத்திட அரும்பாடுபட வேண்டியவர்கள் என்ற பொறுப்புணர்வும், பொறுமையும் அனைவர்க்கும் ஏற்பட்டாக வேண்டும். இதற்குரிய அறிவையும், உணர்வையும் வழங்குபவையே எமது நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள், அஞ்சல்கள்.

உலகைக் குலுக்கிய இருபெரும் பொதுவுடமைப் புரட்சிகள் சமயத்தை எதிர்த்துத் தாக்கி வீழ்த்துதலை உள்ளடக்கியே நிகழ்ந்தன. அதற்குக் காரணம் சமயத் தலைவர்கள் மடாலயங்களின் பெயரால் பெரிய பெரிய முதலாளிகளாகவும், சர்வாதிகாரச் சத்திகளாகவும், சுரண்டல் சத்திகளாகவும், ஏமாற்றுச் சத்திகளாகவும், அறிவியல் முன்னேற்றங்களைத் தடுக்கும் மடமைச் சத்திகளாகவும் ... இருந்திட்டனர் என்பதுதான். அந்த நிலை

இந்துமதத்தில் இல்லவே இல்லை. அதுமட்டுமல்ல, இரசியாவுக்கும் சீனாவுக்கும் கிறித்தவ, புத்த மதங்கள் அன்னியமானவை. ஆனால், இந்தியாவுக்கோ இந்துமதம் மண்ணிலும், கண்ணிலும், கருத்திலும், உணர்விலும், குருதியிலும் ... பிறந்தது. எனவே, இங்கு மதத்தின் ஆணிவேர்கள், அடிமரம், பெருங்கிளைகள் ... முதலியவை எண்ணற்ற வழிபடு இடங்களாக, தனிமனிதர் வரலாறுகளாக, வரலாற்றுப் புகழ்மிக்க சமய சமுதாய அரசியல் நிகழ்ச்சிகளாக, இயற்கை வளம் கொழிக்கும் செழிப்பான இடங்களாக, ஊர்தோறும் ஆங்காங்கே தோன்றி வாழும் சித்தியாளர்களாக, அருளாளர்களாக, தவசிகளாக, மகான்களாக, முனிவர்களாக, இருடிகளாக, ஞானிகளாக ... இப்படிப் பல வடிவங்களில் இருக்கின்றன. எனவே, எந்த ஓர் அரசியல் இயக்கமோ! சமுதாய இயக்கமோ! ... இந்துமதத்தைத் தாக்கித் தகர்த்து வீழ்த்தி அழிக்கும் முயற்சியில் வெற்றி பெறவே முடியாது! முடியவே முடியாது!

சமயச் சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம், கருத்துப் புரட்சி! அறிவுப் புரட்சி! அரசியல் புரட்சி! சமுதாயப் புரட்சி! ... என்ற பெயரில் இந்துமதத்தைத் தாக்க முயன்றவர்கள் எல்லாம் ஆலமரத்தின் நுனிவிழுதைக் கிள்ளியெடுக்க முயலும் சிறுபிள்ளை விளையாட்டு விளையாடியவர்களே! இவர்களின் முயற்சிகள் நீர்மேல் எழுத்துப் போல் மறைந்தன. இவர்களின் சாதனைகள் காலைக் கதிரவனொளிக்கு முன் புல்நுனியில் உள்ள பனித்துளிகள் போன்று ஒளிர்விட்டு முத்தாகத் தோன்றிக் கதிரவனொளியில் விரைவில் மறைபவையே.

இந்த நாட்டைப் பிடித்த கெட்டகாலம் சமயத் தலைவர்கள் பழமைவாதிகளாக, பிற்போக்கு நோக்குடையவர்களாக, உலகியலில் கலக்காதவர்களாக, அறிவியலில் ஈடுபாடு அற்றவர்களாக, சமய சமுதாய அரசியல் நிகழ்வுகளில் பங்கு பெற அஞ்சுபவர்களாக, அளவுக்கதிகமான தனிமை நாட்டமுடையவர்களாக ... இருக்கின்றார்கள். எனவே, இவர்களை வெளிக்கொணரும் முயற்சியில் காலத்தை வீணாக்காமல் பல புதிய சன்னிதானங்கள், பீடங்கள், மடங்கள், இருக்கைகள், அமளிகைகள்,

அருளாளிகள், மருளாளிகள், பூசாறிகள், சாத்திற வல்லார்கள், தோத்திற வல்லார்கள், சமயக் கணக்கர்கள், ஆயகலைச் செல்வர்கள், அருட்கலைச் செல்வர்கள், பிற கலைவாணர்கள், மந்திறத்தார், எந்திறத்தார், தந்திறத்தார், குருக்கள், பண்டாரம், சித்தியார்கள், திருவருட்செல்வர்கள் ... முதலியோரை உருவாக்கிச் சமய மறுமலர்ச்சியை விளைவிக்கும் பணியில் ஈடுபட்டாக வேண்டும் நாம்.

இன்றைய இந்தியாவில் வறுமையும், சுரண்டலும், ஏமாற்றும், பகற்கொள்ளையும், முறைகேடுகளும், குறைபாடுகளும் ... அரசியலின் பெயரால், பகுத்தறிவு இயக்கங்களின் பெயரால், சமுதாய இயக்கங்களின் பெயரால், சமயத் தலைவர்களின் செல்வாக்கால், ... நியாயப்படுத்தப்பட்டும், ஒப்புக்கொள்ளப்பட்டும் தொடர்ந்து வாழ்வு பெற்றிடுகின்றன. இந்த நிலை ஒட்டுமொத்தமாக எல்லாத் துறைகளிலும், எல்லார் செயல்களிலும் மந்தநிலையையே தோற்றுவித்துள்ளன. இதே நிலை என்றென்றும் நீடித்திடும் என்று பலர் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டு அற்பசொற்பச் சுவையில் சப்புக் கொட்டிக் கொண்டுள்ளனர் ...?!?!?! ...

நாட்டில் ஏட்டுலகில் ஏறுநடை போடும் இளைஞர்கள் தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்பதாலும்; பிச்சைக்காரர்கள் பெருகுவதாலும்; நாடோடிகள் வளர்வதாலும்; சுரண்டலும், பதுக்கலும், கொள்ளை லாபமும் செழித்தோங்குவதாலும்; தன்னலக் காரர்களின் புகழாசையும், பொருளாசையும், பதவியாசையும், அதிகாரமோகமும், ஆணவப் போக்கும், அகம்பாவ நோக்கும் ... தலைவிரித்தாடிக் கொண்டே இருப்பதாலும் ... மிகுந்து வரும் இறுக்கம் நெருக்கமாகி அழுத்த மிகுதியால் எரிமலை வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பு ஆறுக ஓடி அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கும் நிலை ஏற்பட்டே தீரும். எனவேதான், மிகமிக முன்னெச்சரிக்கையாக அன்புவழியில், அருள்வழியில், அறவழியில், அமைதிவழியில், மென்மைவழியில் ... ஆக்கப் பணிகளை ஆன்றோர் காட்டிய முறையில் ஆற்றிடப் புறப்பட்டுள்ளோம் நாம். நம்மையும், நமது கொள்கை, குறிக்கோள், நோக்கு, போக்கு, செயல்முறைச் சித்தாந்தம் ... முதலியவைகளையும் உணரத் தவறும் தவறுக்காக நமது

சமய, சமுதாய, அரசியல்வாதிகள் அனைவரும் உரிய பயனைப் பெரிய அளவில் அநுபவித்தே தீருவார்கள். எனவே, அனைவர்க்கும் அறிவு நிறைந்த அன்புமிகுந்த அழைப்பை விடுத்தபடியே தொடர்ந்து சமய மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபடுவோம் நாம்.

நமது 'கடவுளை வழிபடுவோர் கழகம்' [க.வ.க. = K.V.K.] முழுக்க முழுக்கச் சமய மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபடுகின்ற ஓர் அமைப்பேயாகும். இது ஏறத்தாழ எல்லாருக்கும் அடிப்படைச் சமய அறிவு ஏற்படும் முயற்சியையே நோக்கமாகக் கொண்டதாகும். இது, சமய விருப்பாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் ... முறையான சமய வாழ்வு வாழ்ந்து நிறைவையும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் அமைதியையும் பெற்றிடுதற்குரிய பயிற்சிகளை வழங்கும் பல பயிற்சி நிலையங்களையும், பயிற்சி ஆசிரியர்களையும் உருவாக்கும் செயல்திட்டத்தை உடையது. இது, சமய வேறுபாடின்றி எல்லாச் சமயத்தாரும் சிறந்த சமயவாழ்வு வாழ்ந்து கடவுளை வழிபட்டு மானுட வாழ்வின் பயன்களை அடையுமாறு செய்வதையே கொள்கையாக, குறிக்கோளாகக் கொண்டது. இது, சமயத்தை அறிவுப் பூர்வமாக மட்டும் அணுகுவது தவறு; உணர்வுப் பூர்வமாகவும் அணுக வேண்டுமென்ற தெளிவான கருத்தை உடையது. இது, மனித வாழ்வை மென்மையும், அழகுணர்வு, சுவையுணர்வு, அருளுணர்வு, இரக்க உணர்வு, பிறர்நலம் பேணும் நல்லுணர்வு, பிறரோடு கூடி வாழும் ஒற்றுமையுணர்வு ... முதலிய பல நல்ல உணர்வுகளையும் பெற்று உணர்வுப் பூர்வமான ஒன்றாக ஆக்கிட முயல்வதையே பெரிதும் விரும்புகிறது. இது, அறிவு வாழ்வின் உணர்வுகளுக்குத் துணையாகத்தான் செயல்பட முடியுமே தவிர; வாழ்வையே நடத்தும் சத்தியாக மாறிட முடியாதது என்ற தெளிவான முடிவான கருத்தை உலகுக்கு வழங்குகிறது. இது, யாரும் எதையும் கண்மூடித்தனமாக ஆதரிப்பதையோ! எதிர்ப்பதையோ! ... தவறு என்ற கருத்துடையது. இது, அறிவால் அறிய முடியாததையும், அடைய முடியாததையும் அன்பால் அடைய முடியும் என்ற கொள்கையை உயிராகக் கொண்டது.

இந்த அமைப்பில் அனைவரும் ஆர்வமுடன் பங்கு கொள்ள வேண்டும். இந்த அமைப்பு தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு ... முதலிய இன்னோரன்ன பிற அனைத்தையும் பக்குவப்படுத்திட, நெறிப்படுத்திட, முறைப்படுத்திட, முழுமைப்படுத்திட உதவிடும் ஓர் ஒப்புயர்வற்ற அமைப்பாகும். இதன்மூலம் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டிடும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பே சிவம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தன்னையறியும் அறிவே மெய்யறிவு
பின்னை யறிவு பேயறிவு.

**திருவுள ஒப்புதலும் குருவாணையும் பெற்ற அறிக்கை**

**சித்தர் கருவூரர்**
**12.7.80**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: க.வ.க. அறிக்கை சித்தரடியான் நெ.சேவுகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. முடிவுரை குருதேவர் அவர்களின் கையெழுத்திலேயே இருந்தது.//**



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

**சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்)
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609
Printed at Kavin Printers, Madurai

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**